நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதிகளின் விவரம்

1. மதுரை
2. திண்டுக்கல்

(கே. பாலகிருஷ்ணன்)
செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

12/3/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதிகளின் விவரம்

1. நாகப்பட்டினம்
2. திருப்பூர்

(ஆர். முத்தரசன்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

12/3/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

கோபிச்செட்டிபாளையம் - அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில்

தலா 1.25 கோடியில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

ஈரோடு, மார்ச் 13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை ஆகிய 2 அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் நிறுவப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை ஆகிய 2 மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஆணை வழங்கப்பட்டு தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடன் கட்டப்படும்.

இந்திய பொது சுகாதார புதிய தரநிலைகளின்படி, ஒரே இடத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற்றும் பொது சுகாதார பரிசோதனைகளும் கிடைக்கும் வகையில், தொற்று நோய்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் தீவிரமாக பரவும் போது தேவையான பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ளும் வகையிலும் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைக்கப்படும். மேலும், மாவட்டத்தில் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு தலைமை பரிசோதனை ஆய்வகமாகவும் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர்

வா.சௌந்தர்ராஜன் விபத்தில் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 13–

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் நேற்று முன்தினம் (11.03.2024) இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். மரணமடைந்த ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்களின் உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில்

உலக மகளிர் தின விழா!

க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஜெயங்கொண்டம். மார்ச் 13-

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, தா.பழூர் க.சொ.க திடலில்,தா.பழூர்கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில், மகளிர் நலன் போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, "மகளிர் தின விழாவை" முன்னிட்டு மகளிர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், தா.பழூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சொ.க. கண்ணன் தலைமையில் நடைபெற்றதில், கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மகளிர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.ஆர்.ராமதுரை, அவைத்தலைவர் எஸ்.சூசைராஜ், பொருளாளர் த.நாகராஜன்,

ஒன்றிய துணை செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், ராஜேந்திரன், ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் காவேரி (ஆசிரியை ஓய்வு), லூசியா மேரி (விளையாட்டு ஆசிரியர்), மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஆர்.தமிழ்ச்செல்வன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா.சங்கர், ந.கார்த்திகைகுமரன், சம்பந்தம், தங்க.பிரகாசம், முனைவர் முருகானந்தம், எழிலரசி அர்ச்சுனன், தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட 58 வது வார்டு சார்பாக 200–க்கும் மேற்ப்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்ட சிலம்பம் ஆட்டம் மற்றும் கராத்தே போட்டியினை ஐசக் எக்ஸ் எம்.சி. ஏற்பாட்டில் நடைபெற்றது. தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவியற்கு பரிசுகளை வழங்கினார். இதில் 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், தெற்கு பகுதி செயலாளரும் – 56 வது மாமன்ற உறுப்பினர் எஸ்.சேகர், 58 வது மாமன்ற உறுப்பினர் மதுமிதா, வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாநகரத்தின் அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

சாகித்ய அகாதமி விருது பெறும் தமிழ் எழுத்தாளர்

கண்ணையன் தட்சிணா மூர்த்திக்குப் பாராட்டுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

சென்னை, மார்ச் 13–

The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

ஒரு வரலாற்று நிகழ்வை எடுத்துக் கொண்டு, அதனை மையமாக வைத்து, வடகிழக்குப் பகுதிகளின் பின்னணியில் புனையப்பட்ட The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. - 128 வது வார்டு

விருகம்பாக்கத்தில் ஆக்கிரமித்திருந்த அரசு நிலம் மீட்பு!

மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி – பொதுமக்கள் பாராட்டு!

சென்னை, மார்ச் 13–

சென்னை விருகம்பாக்கம் தாங்கல் ஏரிக்கரை மயானப் பகுதியில் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளரான முன்னாள் எம்.எல்.ஏ. விருகை வி.என்.ரவி ஆக்கிரமதித்து ப்ரீசர் பாக்ஸ் வைத்து நடத்தி வந்தார்.

அந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதால் அந்த இடத்தை பயன்படுத்த விருகை ரவிக்கு எதிர்ப்பு கிளம்பியது.

128-வது மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் இதுபற்றி மாநகராட்சி மன்ற கூட்டத்தில் பல முறை பேசி உள்ளார். மாநகராட்சிக்கு சொந்தமான மயான பூமியில் முன்னாள் எம்.எல்.ஏ. விருகை ரவி தனியார் டிரஸ்ட் பெயரில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாகவும் அங்கு உபயோகப்படுத்தும் மின்சாரம் மாநகராட்சிக்கு சொந்தமானது என்றும் கூறினார்

எனவே மேயரும், ஆணையரும் இந்த விஷயத்தில் தலையிட்டு அந்த இடத்தை மீட்க வேண்டும் என்று பேசி இருந்தார். தொடர்ந்து பல கூட்டங்களில் அவர் பேசி வந்த நிலையில் மாநகராட்சி அதிகாரிகள் முறைப்படி விருகை ரவிக்கு நோட்டீசு அனுப்பி அதன்பிறகு அந்த இடத்தை மீட்டனர்.



அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ஆக்கிரமித்து மீட்கப்பட்ட இடம்.

இதுகுறித்து மாநகராட்சி கவுன்சிலர் ரத்னா லோகேஷ்வரன் கூறுகையில், பல வருடங்களாக விருகை ரவி வசம் இருந்த மாநகராட்சி இடத்தை மீட்டு கொடுத்த தமிழக அரசுக்கும், மேயர், ஆணையர் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிப்பதாக கூறி உள்ளார்.

மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் முயற்சியினால் ஆக்கிரமிப்பு நிலம் மீட்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.